**பாலு. சரவணசர்மா**
புரோகிதர்–ஜோதிடர்
எண் 9, 4வது தெரு, கல்யாண் நகர்
தாம்பரம் மேற்கு, சென்னை 600 045

ௐ

கைத்தொலைபேசி : 98403 69677
மின்அஞ்சல் முகவரி: **prohithar@gmail.com**
இணைய தளம்: **www.prohithar.com**
**www.thanigaipanchangam.com**

# பூமி (வாஸ்து) பூஜை

## புரோகிதர் வரும் முன்னர் செய்ய வேண்டியவை

- பூஜை செய்யும் இடம் ஈரம் இல்லாமல் இருக்க வேண்டும், 8 இதழ் தாமரை கோலம் போடவும்
- பட்டியலில் உள்ள அனைத்து பொருட்களும் தேவை
- பட்டியலையும் வாங்கிய பொருட்களையும் ஒப்பிட்டு சரி பார்க்கவும்
- குறித்த நல்ல நேரத்தில் பூஜையை துவக்கி நிறைவு செய்ய நன்கு திட்டமிடவும்
- திருஷ்டி சுற்றி உடைக்க கட்டிட தொழிலாளி குளித்து, வெள்ளை வேஷ்டி உடுத்தி, திருநீறு பூசியவர் தேவை.
- பாதசாரி, வாகன ஓட்டிகளின் பாதுகாப்பு முன்னிட்டு திருஷ்டி பூசணியை **நடு சாலையில் உடைக்க வேண்டாம்**
- பூஜையின் பொழுது பாரம்பரிய கலாசார ஆடை உடுத்தவும் (கருப்பு நிற பேன்ட் தவிர்க்கவும்)
- புத்துணர்ச்சிக்காக குடிநீர், காரம், இனிப்பு, குளிர்பாணம், காபி அல்லது டீ ஏற்பாடு
- பழங்களை பிளாஷ்டிக் பையில் வைக்கவேண்டாம். திறந்த நிலையில் அல்லது குளிர் பதனியில் வைக்கவும்
- நிலத்தில் வரைப்படத்தின் அடிப்படையில் ஈசான்ய (வடகிழக்கு) மூலையில் 3 அடி சதுரம் 1 அடி ஆழம் குழி எடுக்கவும்
- 5 சுமங்கலிகள் தேவை ( மரியாதை தாம்பூலம் சிவப்பு ரவிக்கை துணி அல்லது 11 ரூபாய்)
- கடப்பாரை, மம்மட்டி, பாண்டு ஆகியவற்றுடன் மேஸ்திரி 1 மணி நேரம் முன்னதாக வருகை தரவேண்டும்
- காமாட்சி விளக்கு காற்று அடித்தால் அணையாமல் ஒளிர்விட குண்டு பாத்திரம் (2 லிட்டர் அளவு) தேவை
- சாதாரண காலத்தில் 70 லிட்டர் தண்ணீரும், வெயில் காலத்தில் 100 லிட்டர் (பாதி டிரம்) தேவை
- வெயில் காலத்தில் சாமியானா தேவை, மழைகாலத்தில் தார்ப்பாய் தேவை
- விருந்தாளிகள் உட்கார நாற்காலி, ஜமக்காளம், பாய்.
- காந்தமானி (Magnetic compose) கொண்டு நிலத்தின் திசையை சரியாக அறியவும்

## பூஜைப்பொருட்கள்

| | |
|---|---|
| தரமான மஞ்சள் தூள் | 100 கிராம் |
| தரமான குங்குமம் | 50 கிராம் |
| மஞ்சள்கொம்பு | 25 கிராம் |
| குண்டு மஞ்சள் | 25 கிராம் |
| விபூதி சிறிய | சிறிய பொட்டல்ம் |
| பன்னீர் புட்டி | 50 கிராம் |
| சந்தணம் | 10 கிராம் |
| நவ ரத்தினம் பொட்டலம் | |
| நவதான்யம் கலப்பு | 50 கிராம் |
| கட்டி கற்பூரம் | 50 கிராம் |
| ஊதுபத்தி | 1 கிராம் |
| ஓமத்திரவியம் | |
| உமி பாக்கெட் | 1 |
| அரசன் சுள்ளி | 1 கட்டு |
| நெய் | 100 கிராம் |
| நல்லெண்ணெய் | 100 கிராம் |
| திரிநூல் | 1 கட்டு |
| நூல்கண்டு | 1 |
| பூநூல் | 2 |
| வெற்றிலை | 50 |
| பாக்கு | 25 கிராம் |
| சுன்னாம்பு | சிறியது |
| தீப்பெட்டி | 2 |
| தர்பை புல் | |
| பாக்கு தொன்னை | 1 டஜன் |
| ப்ளேடு / சிறிய கத்தி | 1 |
| வெல்லம் | 200கிராம் |

| | | |
|---|---|---|
| அவல், பொரி, கடலை | | 50 கிராம் |
| நாட்டு சர்க்கரை | | 50 கிராம் |
| தீர்த்த செட் | | 10 கிராம் |
| பச்சரிசி மாவு | | 100 கிராம் |
| வாழை இலை | | 5 |
| வாழை பழம் | | 12 |
| திருஷ்டி பூசனி சிறியது | | 1 |
| எலுமிச்சை பழம் | | 12 |
| பழங்கள் 5 வகை | தலா | 1 |
| மட்டை தேங்காய் | | 1 |
| உரித்த தேங்காய் | | 3 |
| பச்சரிசி | | 1 கிலோ |
| கோதுமை தவிடு | | 2 கிலோ |
| பூச்சரம் | | 15 முழம் |
| உதிரிப்பூக்கள் | | |
| அருகன் புல், துளசி, வில்வம் | | |
| மா இலை கொத்து | | |
| காசி துண்டு | | 1 |
| சிவப்பு ரவிக்கை துணி | | 1 |
| ஐந்து ரூபாய் காசு | | 9 |
| ஒரு ரூபாய் காசு | | 48 |
| 50 காசு | | 9 |
| தானம்: வெள்ளி காசு 5 கிராம் | | 1 |

### வீட்டிலிருந்து

பெரிய பித்தளை சொம்பு 1
காமாட்சி விளக்கு
தட்டு, மணி, தீபக்கலசம்
பஞ்சபாத்திரம் உத்திரனி
பழைய அகல் 2
தாம்பாள தட்டு 3
பேசின் 2
சிறிய கப் 5
மர மணை 3 , மணை மேல் துணி
எண்ணெய் புட்டி
பழைய செய்தி தாள் 10
கைதுடைக்க பழைய துணி
கோணி1
கத்திரிக்கோல், சமையல் கத்தி
தேங்காய் உடைக்க கத்தி

**குடம் 5 + தண்ணீர்**
**செங்கல் 11 – மணல்**
பக்கெட் 1
ஜமக்காளம், பாய், குடை
குடி நீர் / டம்பளார்

இனிப்பு, காரம்,
டிஷ்யூ பேப்பர், பேப்பர் கப், பேப்பர் தட்டு
சிற்றுண்டி, தேநீர் ஏற்பாடு
புகைப்பட ஏற்பாடு
சுமங்கலிகளுக்கு மரியாதை தாம்பூலம்

© www.prohithar.com

பூமி பூஜை குழி அளவு பரிமாணம்




**பூமி பூஜை இட அளவு மற்றும் திசைகள்**

ஈசான்ய மூலையில் (கட்டிடத்தின் உட்புறத்தில்) படத்தில் காட்டியபடி குழி எடுக்கவும்.

குழியில் நீர் பாய்ச்சி ஈரப்படுத்தவும்.

குழியின் உட்புறம் தாமாரைக்கோலம் இடவும்

---

**வாஸ்து நாள் தங்களுக்கு பொருத்தமானதா?**

- வாஸ்து நாள் அன்று கணவன் , மனைவி இருவருக்கும் சந்திராஷ்டம தோஷம் கண்டிப்பாக இருக்கக்கூடாது

**மனைவி கர்பமாக இருக்கும் பொழுது...**

- கட்டிடம் கட்ட துவங்குவதும், கிரஹப்பிரவேசம் செய்வதும் கூடாது (பூமுடிப்புக்கு முன்னர் நன்று- சிலர்)

**இராசிக்கு தலைவாசல்:**

- ரிஷபம், மிதுனம், கடகம்: வடக்கு வாசல், மேற்கு வாசல்(காலப்பிரகாசிகை நூல்படி)
- சிம்ம, கன்னி, துலாம்: கிழக்கு, தெற்கு வாசல், மேற்கு வாசல்(காலப்பிரகாசிகை நூல்படி
- விருச்சிகம், தனுசு, மகரம்: தெற்கு வாசல்
- கும்பம், மீனம், மேஷம், தெற்கு வாசல், கிழக்கு வாசல்(காலப்பிரகாசிகை நூல்படி)



**குடிபுக உகந்த மாதங்கள்:**

- சித்திரை, வைகாசி, ஆவணி, ஐப்பசி, கார்திகை, மாசி
- தெலுங்கு பேசுபவர்கள் ஆடி, புரட்டாசி, பங்குனி அமாவாசைக்கு பின்னர் செய்யலாம்

**குடி புக உகந்த கிழமைகள்:**

- திங்கள், புதன் , வியாழன் , வெள்ளி

**தேய்பிறையும் குடிபுகுதலும்:**

- வளர்பிறையில் பிரவேசம் செய்யலாம்
- தேய்பிறையில் தசமி வரை குடிபுகுதல் நன்று (காலப்பிரகாசிகை நூல்)

**நல்ல நாள்:**

- இல்லத்தரசியின் நட்சத்திரத்திற்கு உகந்த நாளில் கிரஹப்பிரவேசம் செய்ய வேண்டும்




**கிரஹப்பிரவேசம் செய்ய உகந்த காலம்**

- முற்பகலும், நன் பகலும் மிகவும் நல்லது என்கிறது காலப்பிரகாசிகை எனும் பழமையான கிரந்தம்
- அதிகாலை பிரம்ம முகூர்த்தம் என்றாலும் அஷ்டம சுத்தி மிகவும் முக்கியமானது
- அனைத்து நாட்களிலும் அதிகாலையில் கிரஹப்பிரவேசம் செய்ய உகந்த காலம் அமையாது.

**குடிபுக உகந்த வீடுகள்:**

- கட்டுமான வேலை, சுன்னாம்பு பூச்சு, மரவேலை முடிந்த நிலையில் உள்ள வீடு மட்டுமே கிரஹப்பிரவேசம் செய்ய தகுதியான வீடுகள்.
- வாசற்படி வைக்காமலும், தரை பூசாமலும் உள்ள வீடுகளுக்கு கண்டிப்பாக கிரஹப்பிரவேசம் செய்யக்கூடாது
- கிரஹப்பிரவேசம் முன்னர் கண்டிப்பாக ஏதேனும் ஒரு மரம் அல்லது செடியை நடவேண்டும்
- கிரஹப்பிரவேசம் முன்னர் அந்த வீட்டில் ஒரு நாள் முழுவதும்(வெள்ளிக்கிழமை மிகவும் நன்று) பசு, கன்று தங்க வைத்து 5 காலம் உணவளித்தல் அவசியம் என்கிறது சாஸ்திரங்கள்.
- கிரஹப்பிரவேசம் முன்னர் அந்த இடத்தில் கட்டிட பணியாளர்களுக்கு ஒரு நாள் முழுவதும் 3 காலங்கள் சைவ உணவு அன்னதானம் செய்ய வேண்டும்.

**தலைவாசல்:**

- 9க்கு 5 என்கிற விகிதாசாரத்தில் தலைவாசல் இருத்தல் நன்று
- தலைவாசலில் 8 இதழ் தாமரை, இலட்சுமி படம் நன்று
- யானை, மயில், அன்னம் இருத்தல் நன்று
- வாசல் மேல்பகுதியில் சைவர்களுக்கு சிவலிங்கமும், வைஷ்ணவர்களுக்கு சங்கு, சக்கரம், நாமம் இருத்தல் அவசியம்

தட்சனை ரூ. 2000

© www.prohitha.com